1971 ஜூலை 30]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1964-ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் 1,19,304 பேர்கள் வந்திருக்கிருர்கள். இன்னும் ஏறத்தாழ 1½ லட்சம் பேர்கள் வருவதாக அங்கிருந்து தகவல் வந்திருக்கிறது. இதற்கான முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்கிறது. இவர்கள் புனர்வாழ்விற்குப் பல திட்டங்கள் இருக்கின்றன.

* 563 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether a number of Burma evacuees have arrived in Madras City in June 1971; and

(b) if so, the details of the places where they have been provided accommodation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 502 சிருர்கள் உட்பட 1,493 அகதிகள் 1971, ஜூன் 9-ஆம் நாள் அன்று வந்தனர். அவர்களுள், 162 சிருர்கள் உட்பட 527 அகதிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொட்டப்படில் உள்ள இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 92 சிருர்கள் உட்பட 227 அகதிகள் கும்முடிபூண்டியிலுள்ள இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 40 சிருர்கள் உட்பட 96 அகதிகள், கீழப்புலியூரிலுள்ள நிலக்குடியேற்ற திட்டத்தின்கீழ் புதுவாழ்வு வசதிகள் அளிக்கப்படுவதற்காக திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பப்பட்டனர். திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாத்தூரிலுள்ள ஆதரவற்ற மகளிருக்கான சிறப்பு இல்லத்தில் சேர்க்கப்படுவதற்காக ஒரு அகதி அனுப்பப்பட்டார். 27 சிருர்கள் உட்பட 55 அகதிகளும், 13 காபின் பயணிகளும் அவரவர் விருப்பப்படி அவர்களுடைய உறவினர்களுடன் சேர்ந்து கொள்வதற்காக அனுப்பப்பட்டனர். பிற மாநிலங்களுக்குச் செல்வதற்காக இருந்த எஞ்சிய அகதிகள் அவரவர்களுடைய மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அம்மையார் தொகுதியிலுள்ள பர்மா அகதிகளுக்கு புதிதாக வீடுகள் கட்டுவதற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா? அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விரைவில் அதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெறும்.

புதிய பிச்சைக்காரர் இல்லங்கள்.

* 564 வினு—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் புதிய பிச்சைக்காரர் இல்லங்கள் (Beggar Homes) திறக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், வேலூரில் ஒரு பிச்சைக்காரர் இல்லம் திறக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.